Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 77/2019 |
| Deposition of witness for | :: | PW. 3 |
| Name | :: | இராமலெட்சுமி |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர்.

20.01.2025

முதல் விசாரணை:

1. நான் வதுவார்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எனது தம்பி ஆவார். அசா.1 அழகம்மாள், அசா.2 வெள்ளைச்சாமி ஆகியோர்களை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. வதுவார்பட்டியில் உள்ள அசா.1 அழகம்மாளை அவரது தம்பி ஆஜர் எதிரி அடித்ததாக சொன்னார்கள். நான் நேரில் பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்திலிருந்து வேறு ஒரு தெருவில் உள்ளேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 18.10.2017 ம் தேதி அசா.1 அழகம்மாள் அவரது வீட்டில் இருந்தபோது அசா.1 வெள்ளைச்சாமி அவரது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் சென்று விறகு

கட்டையால் இருவரையும் கை, கால், தலையில் அடித்ததையும் , அவரது மனைவி செந்தாமரை அவர்களை அடித்து கொல்ல சொல்லி தூண்டியதையும் நேரில் பார்த்து போலீசாரிடம் கூறிவிட்டு தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 77/2019 |
| Deposition of witness for | :: | PW. 2 |
| Name | :: | வெள்ளைச்சாமி |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர்.
20.01.2025
முதல் விசாரணை:

1. நான் வதுவார்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 அழகம்மாள் எனது மனைவி ஆவார். எதிரி கணேசன் எனது மைத்துனர் ஆவார். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை நான் வதுவார்பட்டியில் உள்ள எனது வீட்டின் வாசலில் உட்கார்ந்திருந்தேன். அப்போது ஆஜர் எதிரி கணேசன் மனைவிக்கு செய்முறை செய்திருந்ததை திரும்ப கேட்டு கொண்டு பேசி கொண்டிருந்தேன். ஆஜர் எதிரியின் மனைவி ஆஜர் எதிரிக்கு போன் செய்து உடனே ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் எனது வீட்டிற்கு முன்பு வந்து எனது வீட்டில் இருந்த கட்டையை எடுத்து எனது இரு கையிலும், விலா பகுதி இருபக்கமும் அடித்து காயப்படுத்தினார்.

2. பின்பு விலக்க வந்த எனது மனைவி அசா.1 யையும் அதே விறகு கட்டையால் தலையில் அடித்து காயப்படுத்திவிட்டார். என் மனைவி அசா.1 ஐ வயிற்றிலும் எதிரி மிதித்தார். ஆஜர் எதிரி வீடும் எனது வீட்டின் ஓரத்திலேயே உள்ளது. பின்னர் நானும், எனது மனைவியும் மருத்துவமனை சென்று 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். போலீசார்

என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

**இல்லை.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 77/2019 |
| Deposition of witness for | :: | PW. 1 |
| Name | :: | அழகம்மாள் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர்.
20.01.2025
முதல் விசாரணை:

1. நான் வதுவார்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கணேசனை எனக்கு தெரியும். கணேசன் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தீபாவளி அன்று 18 ம் தேதி இரவு 8.00 மணியளவில் எனது கணவர் வெள்ளைச்சாமி எனது வீட்டின் வெளியே உட்கார்ந்திருந்தார். அப்போது எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவ செலவிற்காக ஏற்கனவே எனது தம்பி ஆஜர் எதிரி கணேசன் மனைவிக்கு திருமணத்தின் போது கொடுத்த அரை பவுன் தாலிக்கு உரிய பணத்தை திரும்ப தருமாறு அவராகவே வாசலில் உட்கார்ந்து பேசி கொண்டிருந்தார்.

2. அப்போது ஆஜர் எதிரி கணேசன் இருசக்கர வாகனத்தில் வந்து எனது வீட்டிற்கு முன்பு வண்டியை நிறுத்திவிட்டு எனது வீட்டின் தாழ்வாரத்தில் அடுக்கி வைத்திருந்த விறகு கட்டைகளில் ஒரு கட்டையை எடுத்து எனதுகணவரின் இரு கைகளிலும் அடித்து இரு கைகளையும் உடைத்துவிட்டார். நான் போய் விலக்கும்போது என்னையும் அதே விறகு கட்டையால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அவர்களை

கொன்றுவிடு என்று கணேசன் மனைவி சொன்னார். ஆஜர் எதிரியும் உங்களை கொன்றேவிடுவேன் என்று சொன்னார்.

3. பின்னர் நாங்கள் இருவரும் ஒரு வாகனத்தின் மூலம் பந்தல்குடி காவல் நிலையம் சென்று அங்கு நடந்ததை சொல்லிவிட்டு அவர்கள் எங்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்து பந்தல்குடி போலீசார் விசாரிக்கும்போது நானும் எனது கணவரும் நடந்ததை சொல்லி நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு நானும், எனது கணவரும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையிலேயே 10 நாட்களுக்கு மேல் சிகிச்சை எடுத்து கொண்டோம்.

**எதிரி தரப்பில் கு வி**

**இல்லை**